மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.125/2021

வாக்குமூலம்: வா.சா.2 ராம்குமார்

<u>23.01.2024:</u> சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமானத்தின்பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை :–</u> நான் எரமநாயக்கன்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவாச்சொத்து எந்த கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் டி.கே.என்.புதூரில் உள்ளது. பிரதிவாதிகள் தாவாச்சொத்தில் வேலி அமைக்கவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்தை கிரையம் பெற்ற நாள் முதல் தங்கராஜ்தான் விவசாயம் செய்து வருகிறார். தாவாச்சொத்தில் ஒரு வருடத்திற்க முன்பாக நான்தான் விவசாயம் செய்துதவந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான்தான் செய்து வந்தேன். வாதி தங்கராஜ் எனது பெரியப்பா என்பதால் வழக்கிற்காக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் யார்,யார், அவர்களுடைய நிலம் எங்கு அமைந்துள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய பெரியப்பா தங்கராஜ் நிலத்திற்கு பக்கத்தில் அவர்களுடைய உள்ளது. நிலம் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எத்தனை பிரதிவாதிகள் உள்ளார்கள் என்றால், 1ம் பிரதிவாதி மற்றும் 9 பிரதிவாதிகள் பேரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவர்களுடைய நிலம் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. வாதிக்கு நான் சொந்தம் என்பதால் வாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u> இல்லை.

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K KARTHIK

Digitally signed by K KARTHIK
Date: 2024.01.23 11:30:41 +0530

District Munsif,
Palani.